அரசாங்க எஸ்டேட்டிலுள்ள வீடுகள்.

* 89 வினு.—திரு. கரு. சீமைச்சாமி
திரு. கொளத்தூர் கோதண்டம்
திரு. ஏ. எம். ராஜா : } மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள சர்க்கார் எஸ்டேட்டில் சர்க்கார் உத்தியோகம் பார்க்காதவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆம் என்ருல் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு, மு. கருணுநிதி : (அ) சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள அரசாங்க எஸ்டேட்டில் அரசாங்க உத்தியோகம் பார்க்காதவர்களுக்கு அதாவது பொதுமக்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கப்படுவதில்லை. ஆனுல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்காக 11 குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

(இ) இது பற்றிய பட்டியல் a சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, அக்காமடேஷன் கண்ட்ரோலர் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, அரசினர் தோட்டத்தில் உள்ள கோஷன் பிளாக்கிலும், பாண்டு லேன்ஸிலும் உள்ள வீடுகளாவது இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுமா ? அந்த இரண்டு பகுதிகளும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கென்றே ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற 11 குடியிருப்புகள்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பவை. மேலாக எதுவும் யோசிப்பதற்கில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இன்று நகரத்தில் வீட்டு வாடகை உயர்ந்திருக்கிறது. அந்த அளவிற்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கும் வீடுகளுக்கும் வாடகை உயர்த்தப்பட்டிருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தாங்க முடியாத அளவுக்கு எதுவும் வாடகை உயர்த்தப்படவில்லை.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த அடிப்படையில் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன ? அதற்கு என்ன யோக்கியதாம்சங்கள் ருக்க வேண்டும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்கென்று தனி யோக்கியதாம்சங்கள் தேவை இல்லை. தகுதி என்கிற அளவில் பார்ப்பதானுல், அவர்கள் அநேகமாக சென்னையிலேயே தங்கி அலுவல்கள் பார்ப்பவர்களாக இருப்பார்களானுல், அப்படிப்பட்டவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. மு. ச. சிவசாமி : முன்னுள் சட்டமன்ற உறுப்பினர் எவருக்காவது கோஷன் ப்ளாக்கில் கிச்சன் பகுதியில் இடம் இன்னும் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இரண்டு பேருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருமதி ருக்மணி அம்மாள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் திரு. வரதராஜுலு நாயுடு அவர்களின் துணைவியார் ஆவார்கள். ஆகவே, அவர்கள் வாழ்க்கைக்காலம் முழு

---

a 174-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வதுமோ அல்லது அவர்கள் விரும்புகிற காலம் வரையிலுமோ அந்த இடத்தில் அவர்கள் குடியிருக்கலாம் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. திரு. ராஜாராம் நாயுடு, எம். எல். சி. அவர்களுக்கு 31—12—1968 வரையில் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணைக்கட்டு

*90 **வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பொட்டப்பட்டிக்கு அண்மையில் அணை கட்டும் திட்டம் தீட்டப்பெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதுவரை அரசாங்கம் அவ்வணை கட்டும் திட்டத்தை நிறைவேற்றாததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இச் செயற்குறிப்பு குறித்து தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட காரணங்களால் இச்செயற்குறிப்பு குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(1) ஆற்றின் கீழ் உள்ள 10,535 ஏக்கருக்குப் பாசனமளிக்க 210·7 கோடி கன அடி நீர் தேவையாயிருக்க, அடி நிலப்பகுதியில் சராசரி 124·8 கோடி கன அடி நீர் மட்டும் கிடைக்கிறது. தற்போதைய பாசனத்துக்குக்கூட நீர் பற்றாக்குறையாக இருப்பதால், புதிய பரப்பளவிற்குப் பாசன வசதியளிப்பதென்பது இயலாத செயலாகும். (2) மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் சாலை 3 பர்லாங்குத் தொலைவிற்குப் பாதிக்கப்படும். எனவே, அச்சாலையை வேறு திசையில் திருப்பிவிட வேண்டும். (3) விலை மதிப்புள்ள 868 ஏக்கர் தென்னை, மா, புளியந்தோப்புகள் நீரில் மூழ்கிவிடும். அவற்றைக் கையகப்படுத்த வேண்டும். (4) லக்கரைப்பட்டி என்ற ஒரு சிற்றூரும், அடுத்துள்ள பல ஏரிகளும் நீர்த்தேக்கத்தால் மூழ்கடிக்கப்பட்டு விடும். (5) கீழ்ப்பகுதி குடியானவர்களும் இச் செயற்குறிப்புக்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1961-இல் ஆய்வு செய்யப்பட்டது. அமைச்சர் அவர்கள் பல காரணங்களைத் தந்தார்கள். என்றாலும் இந்தத் திட்டத்தினால் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் சில பகுதிகள் நன்மை பெறும் என்று கருதுவதால், மீண்டும் மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கேள்விக்கு ஆதாரவாக, தொடக்க ஆய்வு என்றுதான் தரப்பட்டிருக்கிறது. மீண்டும் ஆய்வு நடத்த வசதி இருக்கிறது. ஆகவே, இதுபற்றி மீண்டும் புனராலோசனை செய்யப்படும்.

Nagapattinam-Tuticorin Express Buses

* 91 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the express buses are run between Nagapattinam and Tuticorin by the Government State Transport Department ;

(*b*) if so, from what date ; and

(*c*) the fare charged and how it compares with those charged by private operators ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.